மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.06.2025) சென்னையில், மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவப் பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து, மயக்கவியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கி, விழா பேரூரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மருராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும்

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் - 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் விரைவில் திறக்கப்படும்!

மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவப் பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை,ஜூன்.14- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.06.2025) சென்னையில், மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவ பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து, மயக்கவியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கி, விழா பேரூரையாற்றினார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மகப்பேறு இறப்பு – சிசு இறப்பு விகிதம் குறைத்தல்!

மக்கள் நல்வாழ்வுத்துறையில் தொடர்ந்து மகப்பேறு காலங்களில் தாய்மார்கள் மரணங்களை குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்ற நாள்முதல் மகப்பேறு இறப்பு விகிதத்தை மிகப் பெரிய அளவில் தொடர்ந்து ஆண்டு தோறும் குறைந்து வருகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற 2021-22 இல் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 90.5 ஆக இருந்தது. 2022-23 இல் இத்துறையின் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 52 ஆக குறைந்தது. 2023-24 இல் 45.5 என்கின்ற அளவில் குறைந்து, ஒரு மகிழ்ச்சியான மனநிலையை தந்தது. கடந்த ஆண்டு இன்னமும் சரிந்து 39.6 ஆக குறைந்திருக்கிறது. அதேபோல் குழந்தை மரண விகிதம் 1000 பிறப்புகளுக்கு 2021-22 இல் 10.4 ஆக இருந்தது. 2022-23 இல் 10.2 ஆக குறைந்தது. 2023-24 இல் 8.2 என்கின்ற அளவில் குறைந்து மகிழ்ச்சியை தந்தது. கடந்த ஆண்டு 2024-25 இல் 7.4 ஆக குறைந்திருக்கிறது. ஆக மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு மரண விகிதங்களை மேலும் குறைத்திடும் வகையில் இத்துறை சார்பில் மகப்பேறியியல் மருத்துவர்களுக்கான பயிலரங்கங்கள், அவர்களுக்கான சிறப்பு வகுப்புகள் ஏற்கெனவே நடத்தப்பட்டது. அதேபோல் குழந்தைகள் நல மருத்துவர்களுக்கான தனியாக பயிலரங்கள் பல்வேறு அமர்வுகளின் மூலம் நடத்தப்பட்டது. தொடர்ந்து இன்றைக்கு மகப்பேறு மருத்துவத்திற்கு மிகப்பெரிய தொடர்புடைய மயக்கவியல் துறையில் 129 மருத்துவர்கள் பங்கேற்றிருக்கின்ற பயிலரங்கம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மயக்கவியல் மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள் இந்த மூன்று பிரிவு மருத்துவர்களுக்கான பயிலரங்கத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் அவர்களுக்கு இடையே உள்ள சந்தேகங்களை போக்கிக் கொள்ள வகையிலான பல்வேறு நிகழ்வுகளின் மூலம் நிச்சயம் அடுத்தடுத்த ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தைகளுக்கான இறப்பு விகிதமும் வெகுவாக குறைந்து பூஜ்ஜிய நிலைக்கு செல்லும் என்று கருதுகிறோம்.

மயக்க மருந்து மற்றும் அது தொடர்பான சேவைகள், மகப்பேறு இறப்பு மற்றும் அது தொடர்பான நோய்களை குறைப்பதில் மிகப் பெரிய பங்காற்றி வருகிறது. புதிய வழிகாட்டுதல்கள் மற்றும் மேம்பட்ட கண்காணிப்பு அம்சங்களினால் தற்போது மயக்க மருந்து நிபுணர்களால் மேம்பட்ட மயக்க மருந்து சேவைகளை மகப்பேறுவிற்காக வருகின்ற தாய்மார்களுக்கு அளிக்க முடியும். மயக்க மருந்தியல் துறையில் தற்போது தேவைக்கு ஏற்ப, புதிய முறைகள் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் மயக்க மருந்து நிபுணர்களுக்கு அது குறித்தான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அப்பயிற்சி வழங்கப்படும் காரணத்தினால் அவர்களுடைய திறன்கள் மேம்படுகிறது. மகப்பேறு இறப்பு மற்றும் நோய்களை தடுப்பதில் இந்த பயிலரங்கத்தில் பெறுகின்ற பயிற்சி பெரும்பங்கு வகிக்க இருக்கிறது. அந்த வகையில் இக்கருத்தரங்கம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் காலிப்பணி இடங்கள் நிரப்புதல்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் வகையில் இன்று பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் இருந்த ஒட்டுமொத்த காலிப்பணியிடங்களை நிரப்பும் முயற்சியாக 2642 மருத்துவர் பணியிடங்கள் ஒரே நாளில் நிரப்பப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி ஆணைகள் தரப்பட்டது. பணி ஆணைகள் தரப்படும் போது இந்தியாவில் முதன் முறையாக அவர்களுக்கு கலந்தாய்வு வைக்கப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணிஆணைகள் தரப்பட்டது. இதில் தேர்வு செய்யப்பட்ட 2642 மருத்துவர்களில் முதுநிலை மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் உள்ள சிறப்பு பிரிவுகளில் மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் நேற்று மகப்பேறியியல் மருத்துவர்கள் 46 பேரும், மயக்கவியல் மருத்துவர்கள் 48 பேரும், குழந்தைகள் நல மருத்துவர்கள் 62 பேரும், ஆக 154 சிறப்பு மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக இத்துறையில் மகப்பேறு மரண விகிதத்தையும், குழந்தைகள் இறப்பு விகிதத்தையும் குறைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை செய்து வருகிறது.

மருத்துவ கட்டமைப்புகள் திறந்து வைத்தல்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து தொடங்கி வைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக முதலமைச்சர் டெல்லிக்கு சென்றிருந்தபோது, டெல்லி ஆம்ஆத்மி மொஹல்லா (Aam Aadmi Mohalla Clinic) எனும் மருத்துவ கிளினிக்கை பார்த்து மக்கள் நெருக்கடி மிகுந்த இடங்களில் தொடங்கப்படும் இம்மருத்துவமனைகளினால் மக்கள் பயன்பெறுகிறார்கள் என்கின்ற நிலை அறிந்து, தமிழ்நாட்டில் சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் 708 நகர்ப்புற நலவாழ்வு மையம் அமையும் என்று அறிவித்தார்கள். ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர், ஒரு சுகாதார ஆய்வாளர் என்கின்ற பணியாளர்களோடு 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமையும் என அறிவித்து, அறிவிக்கப்பட்ட ஒரே ஆண்டில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை சென்னையில் இருந்து முதலமைச்சர் தொடங்கி வைத்தார்கள். காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட அம்மருத்துவமனைகள் தற்போது மிகப் பெரிய அளவில் பயன் பெற்று வருகிறது. மீதமிருந்து 208 மருத்துவமனைகளுக்கு பல்வேறு மாவட்டங்களில் இடப் பற்றாக்குறை, இடம் கண்டறிவதில் ஏற்பட்ட காலதாமத்தினால் அந்தப் பணிகளும் முடிவுற்று 208 மருத்துவமனைகள் தற்போது திறக்கும் தருவாயில் உள்ளது. அதற்கான மருத்துவப் பணியாளர்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் (District Health Society) மூலமாக நிரப்பப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிலான அரசு பொறுப்பேற்றபிறகு, 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக அறிவித்து அதற்கும் பணியாளர்களை நியமிக்கும் பணிகள் இன்னும் 10 நாட்களுக்குள் முடிவுறும் தருவாயில் உள்ளது. எனவே இப்பணிகள் முடிவடைந்தவுடன் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களையும் முதலமைச்சர் மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இன்னொரு மகத்தான கட்டமைப்பு, ஒரே நேரத்தில் தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான பணியாளர்களை தேர்வு செய்து, இன்னும் 3 மாத காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.1018 கோடி செலவில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும் இம்மருத்துவமனைகளும் விரைவில் திறந்து வைக்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு. ராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு. தேரணிராஜன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் மாநகராட்சி, 30–வது வார்டு, சேஷாத்திரிபாளையம் தெருவில், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.18.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடையினை நேற்று (13.06.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பின்னர், பி.எம்.எஸ். மகளிர் மேல்நிலைப் பள்ளியில், நபார்டு நிதியின் கீழ் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஆறு புதிய வகுப்பறை கட்டிடப் பணிகளை சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதிக் கழக செயலாளர் எஸ். சந்துரு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. திரு.வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 7 பேரறிஞரின் இதயமானவர்! பேரொளியாய் உதயமானவர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நடைபெற்றது. இதில் வணிகவரி (ம) பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பேச்சாளர் மதுக்கூர் ராமலிங்கம், பேச்சாளர் முனைவர் திருமதி.எழிலரசி ஆகியோர் புகழுரையாற்றினர். இதில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வட்ட கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ் நன்றி கூறினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இசட். ஆசாத், பா.கதிரவன், க.வினோத் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்டத்தில் 'செம்மொழி நாள்' 5000 பேருக்கு அசைவ விருந்து!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்குகிறார்!

சென்னை, ஜூன் 14- மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னிலையில் இசட் ஆசாத் எம்.சி., பா. கதிரவன், க. வினோத் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., துறைமுகம் கிழக்கு மேற்கு பகுதி மற்றும் எழும்பூர் வடக்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு 5000 நபர்களுக்கு அசைவ உணவு விருந்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரிய கருப்பன். அவர்கள் வழங்கி சிறப்பிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் கிழக்கு மேற்கு மற்றும் எழும்பூர் வடக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 10" விரும்பும் வகையில் விருந்து! பகிர்வோம் அன்பால் மகிழ்ந்து! எனும் தலைப்பில் 5000 நபர்களுக்கு அசைவ விருந்து வழங்கும் விழா 15/06/25 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல்: 11.30 மணி, துறைமுகம் கிழக்கு பகுதி 60 வது வட்டத்தில் மாவட்ட பொருளாளர் இசட் ஆசாத் எம் சி தலைமையிலும், நண்பகல் 12.00 மணி, துறைமுகம் மேற்கு பகுதிபகுதி 54அ வட்டத்தில் வட்ட கழக செயலாளர் பா.கதிரவன் தலைமையிலும்

நண்பகல் 12.30 மணிக்கு எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் க. வினோத் தலைமையிலும் அசைவ விருந்து உணவு வழங்கப்படுகிறது.

இம்மூன்று இடங்களிலும் வழங்கப்படும் அசைவ உணவு விருந்து வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு, பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, சொ.வேலு, வி.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மூன்று இடங்களிலும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அசைவ உணவு விருந்தினை வழங்கி சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, இரா. நரேந்திரன், பி.எம். யாழினி , எஸ்.மணி முடி, என் பி எம் ஷேக் அப்துல்லா, சரிதா மகேஷ் குமார் எம் சி, பரிதி இளம் சுருதி வே.உமா காந்தன் பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன் எம்.விஜயகுமார், கே எஸ் எம் நாதன், கோ மணி, வானவில் விஜய், இப்ராஹிம்கனி, அ.நிர்மலா தேவி ஆர். கலைச்செல்வி , ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி, வெ.பரிமளம் எம் சி ,ராஜேஷ் ஜெயின் எம் சி,க. நந்தீஸ்வரன்,ஜி தாமோதரன் P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப. ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம். ஜெய்சங்கர், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், எழும்பூர் தெற்கு பகுதி வட்டச் செயலாளர்கள் டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், ஆர்.பாபு, வி.விஜய்குமார், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்கள் வி. அபாய், D.தயாளன், ந.பாலு, சு மனோகர், சி. சேகர், ஆர்.எம்.ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள்,கழக முன்னோடிகள்,கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சிதம்பரம் ந. தியாகராஜன் தலைமையில்! குவைத் நாட்டில் தி.மு.க. அயலக அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு!

கார்த்திகேய சிவசேனாபதி – போஸ் வெங்கட் – பரிதி இளம் சுருதி – எஸ்.எம். ஹைதர் அலி பங்கேற்பு!

குவைத், ஜூன் 14- குவைத் நாட்டில் நேற்று (ஜூன் 13 வெள்ளிக் கிழமை) தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி, குவைத் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு மிக பிரம்மாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. தி.மு.க. அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தாயகத்திலிருந்து சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய தலைவரும் தி.மு.க. கழக சுற்றுச்சூழல் அணி செயலாளருமான கார்த்திகேய சிவசேனாபதி, நடிகர், இயக்குனர், தலைமை கழக பேச்சாளருமான போஸ் வெங்கட், தி.மு.கழக அயலக அணியின் மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி மற்றும் குவைத்தின் தொழிலதிபர், எம்.ஏ ஹைதர் குழும நிறுவனர் டாக்டர், எஸ்.எம்.ஹைதர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2010 ஆம் ஆண்டு புலம்பெயர் தமிழர்களின் வாழ்வில் ஏற்றம் காண அவர்களுக்கென தனி நல அமைச்சகம் வேண்டும் என முடிவெடுத்து அதை செயல்படுத்தும் விதத்தில் சட்ட முன் வடிவை ஏற்படுத்தி இருந்தார். பின்பு ஆட்சி மாற்றத்தால் அந்த செயல் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

அதன் விளைவாக கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 2021 ஆம் ஆண்டு அமைந்த திராவிட மாடல் அரசு புலம்பெயர் தமிழர்களுக்கு தனி நல அமைச்சகத்தையும் தனி நல வாரியத்தையும் அமைத்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளது.

இதற்கு நன்றி கடனாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அயலக தமிழர்களின் எழுச்சி நாளாக இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ் விழாவில் குவைத்தில் தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களை பெருமைப்படுத்தும் விதமாக விழா மேடையில் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டனர்.

மேலும் இவ்விழா அயலகத் தமிழர்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கவும், தமிழ்நாடு அரசு புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்கி உள்ள நலத்திட்டங்களை பற்றியும் மேலும் அவற்றை பெறக்கூடிய வழிமுறைகள் பற்றி விளக்கும் விதமாகவும் அமைந்தது.

இவ் விழா குவைத் வாழ் தமிழர்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியது.

திருவள்ளூர் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் புறவழிச் சாலை திட்டம் அறிவிக்கப்பட்டு திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நெடுஞ்சாலைத்துறை சார்பில் நடைபெற்று வரும் நிலையில் பணிகள் மேம்பாடு குறித்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கோட்ட பொறியாளர் உடன் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டார்.இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை உதவி செயற் பொறியாளர் , உதவி பொறியாளர், மாவட்ட கழக அவை தலைவர் க.திராவிடபக்தன், மாவட்ட துணை செயலாளர் சி. ஜெயபாரதி, ஒன்றிய செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.